# பிபில பிரதேச சபை
# மொனராகலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூலை 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிபில பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 15,451,860 தொகையான உள்நாட்டுக் கடன் நிதியத்தின் கடன் மீதி கணக்கில் ரூபா 4,237,282 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் வெளிச் செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணத்திற்காக உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திட்டமிருந்து பெறப்பட்ட ரூபா 13,921,746 தொகை கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன் செலுத்த வேண்டிய சலுகை வட்டி ரூபா 1,390,983 தொகை செலுத்த வேண்டிய செலவினமாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்கவேண்டிய சம்பள மீளளிப்பு ரூபா 1,395,464 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 361,088 கூட்டுத்தொகையான சொத்துக்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,871,558 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,749,405 ஆக இருந்தது.

### 2.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் உள்ளவாறான செலவினம் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்களுக்கிடையே 40 சதவீதம் தொடக்கம் 272 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 3,073 | 1,371 | 1,702 |
| (ii) | வாடகை | 2,428 | 2,158 | 270 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 466 | 485 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,242 | 1,188 | 54 |

### 2.3.2 ஆதனவரி

3,603 ஆதனவரி அலகுகளிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் தகிதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 3,853,441 தொகையான நிலுவைப் பணத்தை அறவீடு செய்து கொள்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டின் நிலுவை வருமானத்தை விட மீளாய்வாண்டின் நிலுவை வருமானம் 79 சதவீதம் அதிகரித்திருந்தது.

### 2.3.3 வாடகை

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் பிரகாரம் 1999 ஆம் ஆண்டின் பின்னர் கடை வாடகை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடை இல. 01, 02 மற்றும் 04 என்ற மீன் கடைகளிலிருந்து 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை அறவிடவேண்டிய ரூபா 966,679 தொகையான நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.5 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக 2009 ஆம் ஆண்டின் போது மாகாண குறித்தொதுக்க மானியத்தின் கீழும் சபை நிதியத்திலிருந்தும் ரூபா 1,579,290 கூட்டுத்தொகையான செலவினத்தைச் செய்து கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தளமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆகஸ்ட் 02 ஆந் திகதி வரையிலும் கூட்டுப்பசளை உற்பத்திச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிபிலை நகரத்தில் அகற்றப்படுகின்ற குப்பைகள் முறையற்ற வகையில் பிபிலை மட்டக்களப்பு பிரதான வீதியின் அருகில் அமைந்துள்ள பாக்கு மரங்களுக்கிடையில் போடப்பட்டிருந்தன. இம்முறையில் குப்பைகளை அகற்றுவதனால் அருகிலுள்ள சுற்றாடல் முழுவதும் பொலித்தீன் போன்ற பொருட்கள் பரவிப் போடப்பட்டிருந்ததுடன் பிரதேசத்தில் ஈக்களின் பெருக்கமும் நிரம்பிக் காணப்பட்டது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்